


நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று (17.06.2025) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 2025–2026 ஆம் ஆண்டிற்கான சட்டக் கல்வி மாணவர் சேர்க்கை தரவரிசைப் பட்டியலின்படி மாணவர்களுக்கு ஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் பணிக்குழு உறுப்பினர் / சட்டத்துறை செயலர் திரு சி ஜார்ஜ் அலெக்ஸ்சாண்டர், பல்கலைக்கழகத்தின் பதிவாளரும் சட்ட சேர்க்கை குழுவின் தலைவருமான பேராசிரியர் (முனைவர்) கௌரி ரமேஷ், சட்ட சேர்க்கை குழுவின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் முனைவர் ரஞ்சித் ஓமன் ஆபிரகாம் மற்றும் உறுப்பினர்கள் பேராசிரியர் வி.. பாலாஜி, பேராசிரியர் திரு. எஸ்.கே.அசோக் குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

### பெண்களுக்குப் பயத்தை உண்டாக்கி அவர்களை வீட்டுக்குள்ளேயே முடக்கும்

# பா.ஜ.க.வின் கொள்கையை பழனிசாமி வழிமொழிவது வெட்கக்கேடு!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

**சென்னை, ஜூன்.18–**

**வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :–**

கடலூர் பண்ருட்டி அருகே மூதாட்டி பாலியல் துன்புறுத்தல் செய்யப்பட்டதாகச் சொல்லப்படு வழக்கில் விரைவாகக் காவல்துறையினர் குற்றவாளி சுந்தரவேல் என்பவனைச் சுற்றி வளைத்துச் சுட்டுப் பிடித்துள்ளனர். இந்த வழக்கில் வேறு யாருக்கும் தொடர்பு இல்லை; கூட்டு பாலியல் வன்கொடுமை நடக்கவில்லை என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. போலீஸ் விரைந்து செயல்பட்டு குற்றவாளியைக் கைது செய்துள்ளதைக் கண்டு பொறுக்க முடியாத பழனிசாமி வழக்கம் போல அவதூறு அரசியலைத் தொடங்கியிருக்கிறார்.

பழனிசாமி ஆட்சியில் பெண்களுக்கு எதிராக பாலியல் குற்றங்கள் நிகழ்ந்தால், குற்றவாளிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டு, பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்தையே தாக்கி மிரட்டும் சூழல் நிலவியது தற்போது அது மாறி பெண்களுக்கு எதிராக எவர் குற்றச் செயலில் ஈடுபட்டாலும் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு கைது செய்யப்படுகிறார்கள். அதோடு வழக்கு விசாரணையை விரைந்து முடித்து உச்சபட்சத் தண்டனையும் பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது.

2018 செப்டம்பரில் 60 வயது மூதாட்டியைப் பாலியல் வன்கொடுமை செய்த 2 இளைஞர்களின் ஜாமீன் மனுவை விசாரித்த நீதிபதி கிருபாகரன், “18 மாத கைக்குழந்தை முதல் 100 வயது மூதாட்டி வரை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகின்றனர். பாலியல் வன்கொடுமைகளைத் தடுக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?'' என பழனிசாமி ஆட்சியை பற்றித் தான் அன்றைக்குக் கேள்வி



எழுப்பினார். இதையெல்லாம் மறந்துவிட்டு கூச்சமே இல்லாமல் யோக்கிய சிகாமணி போல பழனிசாமி வேஷம் போடுகிறார்?

**பழனிசாமி ஆட்சியின் குற்றச் சம்பவங்கள்!**

- 2021 ஜனவரியில் துவரங்குறிச்சி சந்தைப்பேட்டையில் 68 வயதான மூதாட்டியைப் பாலியல் வன்கொடுமை செய்து கொன்ற கஞ்சாவுக்கு அடிமையான 16 வயது சிறுவன்.
- 2021 பிப்ரவரியில் திருவொற்றியூர் மார்க்கெட் பகுதியில் 80 வயது மூதாட்டிக்குப் பாலியல் வன்கொடுமை.
- 2020 செப்டம்பரில் மதுரை மேலூர் அருகே குடிபோதையில் 80 வயது மூதாட்டியைப் பாலியல் வன்கொடுமை செய்த இளைஞர்.
- 2020 அக்டோபரில் திருநெல்வேலி: பணகுடி கோரி காலனியில் 68 வயது மூதாட்டியைப் பாலியல் வன்கொடுமை செய்த இளைஞர்.
- 2020 டிசம்பரில் பொள்ளாச்சி அருகே உள்ள நம்பியமுத்தூர் பகுதியில் கணவரை இழந்த 75 வயது மூதாட்டிக்கு பாலியல் தொல்லை கொடுத்த இளைஞர்.

இப்படி பழனிசாமி ஆட்சியில் மூதாட்டிகள் கூட பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதைப் பட்டியலிட முடியும்.

தனது ஆட்சியில் நடந்த குற்றச் சம்பவங்களை மறந்துவிட்டு திமுக ஆட்சியில் நடக்கும் குற்றங்களை மட்டுமே பூதாகரமாகப் பேசுவதைப் பார்த்தால் பழனிசாமி மறதி நோய்க்குச் சிகிச்சை பெறுவது நல்லது.

பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி பெண்கள் பாதுகாப்பில் துளியும் சமரசமின்றித் திராவிட மாடல் அரசு செயலாற்றி வருவதால்தான், இன்று இந்தியாவிலேயே அதிகமாகப் பெண்கள் வேலைக்குச் செல்லும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. அதோடு இந்தியாவிலேயே பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலமாகவும் தமிழ்நாடு முன்னணி யில் உள்ளது. அதன் காரணமாகத் தான் பெண்கள் விரும்பும் ஆட்சியாகவும், பெண்களின் பெரும் ஆதரவு பெற்ற முதலமைச்சராகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இருக்கிறார்.

இதனையெல்லாம் கண்டு பொறுக்காமல் எங்காவது ஏதாவது அசம்பாவிதம் நடந்து விடாதா? அதை வைத்து அரசியல் செய்ய முடியாதா? என நாள்தோறும் அலைகிறார் பழனிசாமி. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டாலும் கூட உள்நோக்கத்தோடு அதை வைத்து அரசியல் செய்கிறார். பழனிசாமியின் இந்த அரசியல் மறைமுகமாகப் பெண்களின் வாழ்வாதாரத்தை அச்சுறுத்துகிறது.

**பாலியல் குற்றவாளிகளான அ.தி.மு.க. நிர்வாகிகள்!**

பெண்களுக்குப் பயத்தை உண்டாக்கிஅவர்களைவீட்டுக்குள்ளேயே முடக்கும் பாஜகவின் கொள்கையை பழனிசாமி வழிமொழிவது வெட்கக் கேடானது.

பழனிசாமியின் ஆட்சி பெண்களுக்கு எதிரான கொடுங்கோல் ஆட்சியாக இருந்ததற்கு பொள்ளாச்சி கூட்டுப் பாலியல் வன்கொடுமையே சாட்சி. பாலியல் குற்றவாளியான அதிமுக நிர்வாகிகளுக்கு அடைக்கலம் கொடுத்துப் பாதுகாத்த பழனிசாமிக்கு, தற்போது பெண்களின் பாதுகாப்பே முதன்மை என ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சர் அவர்களைப் பற்றிப் பேச எந்தத் தகுதியுமில்லை.

அ.தி.மு.க. ஆட்சியில் கஞ்சாவும், தடை செய்யப்பட்ட குட்காவும் கடல் போலப் பெருகிக் கிடந்ததை எல்லாம் பழனிசாமி மறந்து விட்டாரா? குட்கா பாஸ்கர் என மக்கள் கூறும் அளவு அமைச்சர்களை வைத்து குட்கா விற்று கல்லா கட்டிய பழனிசாமியா போதைப் பொருட்கள் பற்றிப் பேசுவது? அதிமுக ஆட்சியில் மக்களைச் சீரழித்த கஞ்சா, குட்கா போதைப் பொருட்களை எல்லாம் இரும்புக் கரம் கொண்டு அடக்கி அதன் புழக்கத்தைத் தடுத்துள்ள ஆட்சி திராவிட மாடல் ஆட்சி என்பது மக்களுக்குத் தெரியும்.

தனது கூட்டணிக்குள் நடக்கும் குஸ்தியையும், பாஜகவின் ஆட்சி அதிகார மிரட்டல்களையும் சமாளிக்க முடியாமல் திணறும் அடிமை பழனிசாமி அதை மடைமாற்ற வீண் அவதூறுகளைக் கொட்டி என்னதான் கலர் கலராய் ரீல் விட்டாலும் அது எதுவும் மக்கள் மத்தியில் எடுபடாது.

தமிழ்நாட்டு மக்கள் முடிவு செய்து விட்டார்கள் 2026ல் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி 2.ഠ அமையும், முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முதலமைச்சராவது உறுதி. கையில் இருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையாவது காப்பாற்றிக் கொள்வீரா? இல்லை அதையும் அமித்ஷா காலடியில் அடமானம் வைத்துவிட்டீரா அடிமை பழனிசாமி அவர்களே!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




அரசு முறை பயணமாக ஜெர்மனி நாட்டிற்கு சென்றுள்ள குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் புகழ்பெற்ற போருஷியா டோர்ட்முண்ட் கால்பந்து கழகத்தை (BVB) நேரில் சென்று பார்வையிட்டு, கால்பந்து கழக ஒருங்கிணைப்பாளருடன் தமிழகத்தில் உலகத் தரத்திலான விளையாட்டு தொழில் வளர் மையத்தினை (Sports Incubation Centre) நிறுவுவதற்கான ஆலோசனை நடத்தினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூரில் நடைபெற்ற அரசு விழாவில் புதிய விரிவான மினி பேருந்து திட்டத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் பேருந்து நிலையத்தில் புதிய விரிவான மினி பேருந்துத் திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (16.06.2025) கிராமங்கள் குக்கிராமங்கள் பயன் அடையும் வகையில், பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வில் ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன், கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் உடன் உள்ளார்கள்.

### கிராமங்கள், குக்கிராமங்கள் பயனடையும் வகையில்

# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் புதிய விரிவான ‘மினி பேருந்து’ திட்டம்!

## அமைச்சர் எ.வ.வேலு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

*கள்ளக்குறிச்சி, ஜூன் 18 -*

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் தஞ்சாவூரில் நடைபெற்ற அரசு விழாவில், தமிழக முழுவதும் பஸ் வசதி இல்லாத மக்கள் பயன்பெறும் வகையில் 3,103 வழித்தடங்களில் புதிய விரிவான மினி பேருந்து திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் பேருந்து நிலையத்தில் புதிய விரிவான மினி பேருந்து திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (16.06.2025) திங்கள் கிழமை அன்று கிராமங்கள், குக்கிராமங்கள் பயனடையும் வகையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்திகேயன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன், கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலை யரசன் ஆகியோர் உடன் இருந்தனர்.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து துறைகளும் முதன்மை துறைகளாக சிறந்து விளங்கிட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் சம்பந்தப்பட்ட துறைகளுக்கான பல்வேறு சிறப்பு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார், அதன்படி போக்குவரத்து துறையில் கூடுதல் பேருந்துகள், கிராமப்புற பகுதிகளில் புதிய வழித் தடங்களுக்கான பேருந்து சேவைகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி பொதுமக்களின் நலனை பாதுகாத்து வருகிறார், அதன்படி தமிழ்நாடு அரசு புதிய விரிவான மினி பேருந்து திட்டம் 2024ன் படி பொதுமக்கள் நலன் கருதி பேருந்து வசதியில்லாத கிராமங்கள், குக்கிராமங்கள், நகரங்களுடன் இணைத்து ஒருங்கிணைந்த சாலை போக்குவரத்து சேவை வழங்குவதற்காக வெளியிடப்பட்டுள்ளது, அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தஞ்சாவூரில் புதிய விரிவான மினி பேருந்து திட்டம் நேற்று முன்தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் பேருந்து நிலையத்தில் புதிய விரிவான மினி பேருந்து திட்டத்தினை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்கள்.

புதிய விரிவான மினி பேருந்து திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட வழித்தடத்தின் நீளம் 25கி.மீ ஆகும். பழைய மினி பேருந்து வழித்தடத்தின் நீளம் 20கி.மீ ல் இருந்து 25 கி.மீ ஆக தடம் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மினி பேருந்து சேவை மொத்த வழித்தடத்தில் இருந்து 65% பேருந்து செல்லாத வழித்தடமாகவும் 35% பேருந்து செல்லும் வழித்தடத்திற்கு அனுமதிச்சீட்டு வழங்கப்பட வேண்டும். மினி பேருந்து குறைந்த பட்ச கட்டணம் ரூ.4.00 அதிகபட்சமாக ரூ.11 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஏற்கனவே 70 மினி பேருந்து வாகனங்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது. புதிய விரிவான மினி பேருந்து திட்டம் 2024ன் படி இம்மாவட்டத்தில் புதிய வழித் தடத்திற்கான விண்ணப்பம் பெறப்பட்டு புதிய அனுமதி சீட்டு வழங்க செயல்முறை ஆணை 59 வாகனங்களுக்கும் ஏற்கனவே இயக்கப்படும் மினி பேருந்துகளுக்கு வழித்தடம் நீட்டிப்பு செய்து 55 வாகனங்களுக்கும் செயல்முறை ஆணை வழங்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மினி பேருந்து திட்டம் துவக்க நாளான நேற்று முன்தினம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இயக்க 8 வாகனங்களுக்கு புதிய வழித்தடத்தில் புதிய அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே இயக்கப்பட்ட மினி பேருந்து வழித்தடம் நீட்டிப்பு செய்த 27 மினி பேருந்துகளுக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் மூலம் மினி பேருந்துக்கான அனுமதிச் சீட்டு பெற செயல்முறை ஆணை பெற்ற விண்ணப்பதாரருக்கு தொடர்ந்து அனுமதிச்சீட்டு வழங்கப்படும்.

எனவே புதிய விரிவான மினி பேருந்து திட்டத்தினை பயணிகள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தியாகதுருகம் ஒன்றியக் குழுத் தலைவர் ந.தாமோதரன், தியாகதுருகம் ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் இரா.நெடுஞ்செழியன், அட்மா திட்டக்குழு தலைவர் ஒன்றிய கழக செயலாளர் அண்ணாதுரை, பேரூராட்சி மன்ற தலைவர் வீராசாமி, துணைத் தலைவர் சங்கர், வட்டார போக்குவரத்து அலுவலர் நெடுஞ்செழியபாண்டியன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், தொடர்புடையத் துறை அலுவலர்கள் உள்ளிட்ட மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர், கிளை கழக கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### 12வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு!

# வாஷிங்டனில் அக் 3- அன்று நடைபெறுகிறது!

## பொருளாதார மேதைகள் பங்கேற்பு! வி.ஆர்.எஸ்.சம்பத் தகவல்!

*சென்னை, ஜூன் 18 -*

12ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு, வாஷிங்டன், டி.சி - அமெரிக்காவில் அக்டோபர் 3 ,4 ,5 2025 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது.

உலகத் தமிழர் பொருளாதார நிறுவனம், மற்றும் சென்னை வளர்ச்சிக்கழகம், சென்னை இணைந்து 12ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு, வாஷிங்டன், டி.சி - அமெரிக்காவில் அக்டோபர் 3 ,4 ,5 2025 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில், உலகெங்கிலும் உள்ள தமிழ் தொழில் முனைவோர், நிபுணர்கள் மற்றும் அறிஞர்கள் ஒன்றிணைத்து, உலக அளவில் தமிழர் பொருளாதார மற்றும் பண்பாட்டுப் பங்களிப்பை வலியுறுத்தும் முக்கியமான பன்னாட்டு நிகழ்வாகும். உலகமெங்கும் இருந்து தலைசிறந்த வல்லுநர்கள், பொருளாதார மேதைகள், தமிழ்நாடு அரசின் உயர் அதிகாரிகள் மற்றும் ஒன்றிய அரசின் உயர் அதிகாரிகள், அமைச்சர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்த மாநாட்டின் இணையதளத் தொடக்கமும் மாநாட்டு விளக்க அறிக்கை வெளியீடும் அறிமுக விழா 16 ஜூன் 2025 ஹோட்டல் லீ ராயல் மெரிடியன், சென்னையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சிறுபான்மை நலத் துறை மற்றும் அயலகத்தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு. நாசர் கலந்து கொண்டார். விஐடி பல்கலைக்கழகம், வேலூர் வேந்தர், டாக்டர் ஜி. விசு வநாதன், தலைமையேற்றுச் சிறப்புரையாற்றினார்.




உலகத் தமிழர் பொருளாதார மாநாடு வாஷிங்டனில் அக்.3 அன்று நடைபெறுவதையொட்டி இதற்கான இணையதளத்தை அமைச்சர் சா.மு.நாசர், வி.ஐ.டி.பல்கலைக் கழக வேந்தர் டாக்டர் ஜி.விசுவநாதன் தலைமையில் தொடங்கி வைத்தார். உடன் ஜெயந்தி தங்கபாலு, வி.ஆர்.எஸ்.சம்பத் மற்றும் பலர் உள்ளனர்.

சிறப்புவிருந்தினர்களாக டாக்டர் பழனி ஜி. பெரிய சாமி -( தலைவர், பிஜிபி குழுமம்) , எம்.எம். அப்துல்லா - எம்.பி., கி. வீரமணி - (தலைவர், ஜெம் குழுமம்) டாக்டர் பீட்டர் (தலைவர், மாதா மருத்துவக் கல்லூரி.) வி. மகாலிங்கம், ஐ.எப்.எஸ் (ஓய்வு) - (முன்னாள் இந்தியத் தூதுவர் கயானா) வீரா வேணுகோபால் (முன்னாள் தலைவர், தமிழ்நாடு அறக்கட்டளை, USA) டாக்டர் டி. சரவணன் - (தலைவர், சேலம் சட்டக் கல்லூரி) ஏ.அபுபக்கர் (தலைவர், பிரசிடெண்ட் குரூப்) , சென்னை. திருமதி. ஜெயந்தி தங்கபாலு (தலைவர், மெகா டிவி. சென்னை) ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக மாநாட்டு நிகழ்வுகள் நோக்கம் எதிர்பார்க்கும் விளைவுகள் குறித்து உலகத் தமிழர் பொருளாதார நிறுவனம் மற்றும் 12ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் விளக்கிக் கூறினார்.

இந்நிகழ்வில் தொழில் துறையினர், தொழில் கூட்டமைப்பினர்,பேராசிரியர்கள் தொழில் முனைவோர்கள் உள்ளிட்ட பலர் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.